## முகவுரை

*ஷீர்டி தலத்தில் வேப்பமரத்தடியில்*
*பதினாறு வயது பாலகனாய் சாயிபாபா தோன்றினார்.*

பூமாதேவியைத் தாயாகவும், ஆகாயத்தை தந்தையாகவும் கொண்டு சாயிபாபா ரூபத்தில் இறைவன் அவதரித்தார்.

மஹான்களுக்கு ஜாதி, மதம் இல்லை. தயை, சாந்தி, தர்மம் இதுவே மஹான்களின் தர்மம் ஆகும். எளியோரை ரட்சிப்பதற்காக கருணைக் கடலான சாயிபாபா இந்த சுக துக்கம் நிறைந்த உலகில் அவதரித்தார். எல்லோருக்கும் இறைவன் ஒருவனே! இந்த ஆழ்ந்த உண்மையை எளிதாகப் புரிய வைத்தார் சாயிபாபா. எவன் பக்தியும், பொறுமையும் கொண்டு அவரை வழிபடுகிறானோ, அவனுக்கு நிச்சயம் சாயி உதவுகிறார். நடந்ததை மறந்து விடு, இனி வரும் வாழ்வை நல்லபடியாக வாழ வேண்டும் என்று போதித்தார். நமது உள்ளுணர்வான அந்தராத்மாவை நினைந்து ஈச்வரனையே தியானம் செய்ய வேண்டும். சாயிபக்தி என்னும் நெருப்புக் கொழுந்தை மனமெனும் துனியில் எரியவிட்டு ஆனந்திக்க வேண்டும். கடவுளை வெளியே எங்கும் தேடாமல் அவர் நமக்குள்ளேயே இருக்கிறார் என்பதை உணர வேண்டும்.

எவன் சாயி பக்தியை மனதில் வளர்க்கிறானோ, அவன் துன்பங்கள் தொலையும், தடைகள் நீங்கும். சுகங்கள் நிரம்பியவன் ஆகிறான். எவன் சாயி மேல் திடமான பக்தியை வைக்கின்றானோ அவனது விருப்பங்களை சாயி பூர்த்தி செய்வார். *நானே சாச்வதம், நானே சத்தியம்* என்று தூய மனதால் நம்புபவனுக்கு அநுபவங்கள் தன்னாலேயே ஏற்படும் என்று சாயி கூறுகிறார். *எவன் என்னுடைய திருவடிகளை அடைகின்றானோ அவனுடைய அத்தனை எண்ணங்களையும் ஈடேற்றுவேன். என்னை எந்த ரூபத்தில் பக்தன் பார்க்க விரும்புகிறானோ அதே ரூபத்தில் அவனுக்கு காட்சியளிப்பேன். எவன் என்னை அடைக்கலம் அடைகின்றானோ அவன் பாரத்தை நான் சுமக்கிறேன். எவன் தன் உடல், மனம், தனம், செய்கைகளை எனக்கே அர்ப்பணித்து என்னைத் தியானம் செய்கின்றானோ, எவன் தன் துன்பங்களை என்னிடம் ஒப்புவிக்கின்றானோ, எவன் சாயி நாமத்தை தினமும் ஜபிக்கிறானோ அவன் பேத, பாவங்களில் இருந்து விடுபட்டு என்னையே அடைகின்றான்* என்று சாயிபாபா உறுதி அளித்துள்ளார்.





தர்மங்கள் தாழும் போதும், அதர்மங்கள் ஓங்கும் போதும் இறைவன் பல ரூபங்களில் உலகில் அவதரித்து, தர்மத்தை நிலை நாட்டி, மானிடத்தை உய்விக்கிறார். இந்த அவதாரங்களில் ஷீர்டி சாயிபாபாவின் அவதாரமும் மிக முக்கியமானதாகும். ஷீர்டி சாயிபாபாவைப் பற்றி தெரியாதவர் யாருமுண்டா? சாயி பக்தியின் சக்தியை அறிந்த அவர் பக்தர்கள் அவரை பரமேஸ்வரனின் அவதாரமே என்று அறுதியிட்டுக் கூறுகின்றனர். சாயியை யாராவது ஹிந்து என்றால் திருக்குரான் மந்திரங்களை ஓதிக் காண்பித்தார். அவரை யாராவது முஸ்லீம் என்றால் சமஸ்கிருதத்தில் சிவஸ்தோத்திரங்கள் சொல்லி அனைவரையும் வியப்பில் ஆழ்த்தினார். சாயிபாபா ஹிந்து, முஸ்லீம் ஒற்றுமையின் சின்னமாகத் திகழ்ந்தார்.

சாயிபாபா சிலருக்கு சிவ ரூபத்திலும், சிலருக்கு விஷ்ணு ரூபத்திலும் காட்சியளித்தார். சாயி ஸ்வரூபத்திலே ஆயிரக்கணக்கானோர் அவர் லீலைகளை கண்டு களித்தனர். யாரால் சொல்ல முடியும் சாயி இந்த உலகில் இப்பொழுது இல்லை என்று? அப்படிச் சொல்பவன் அறியா மூடனன்றி வேறு யாராக இருக்க முடியும். சாயி பக்தர்களைப் பொறுத்தவரை அவர் இன்னும் உயிரோடு இருக்கிறார். துயருற்ற பக்தன் உண்மையான பக்தியுடன் அவரை அழைத்தால் அக்கணமே ஓடோடி வந்து அவன் கண்ணீரைத் துடைக்கிறார்.

சாயிபாபா பூத உடலில் இருந்த போது எத்தனையோ அற்புதங்கள் புரிந்தார். இன்றும் தூய மனதில் , திடமான பக்தி கொண்டு, நியமப்படி பூஜித்தால் நிச்சயம் பலன் கிட்டுகிறது. சாயி இன்றும் பக்தர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்கிறார். இது அவர் பக்தர்களின் கண்கண்ட அநுபவம் ஆகும்.

*சாயிபாபா சாட்சாத் கடவுளே ஆவார்.*

சாயிபாபாவின் மேல் நம்பிக்கை வைத்து 9 வியாழக்கிழமைகள் விதிமுறைப்படி விரதம் இருந்தால் நிச்சயம் விரும்பிய பலனை அடையலாம். சாயி விரதம் மேற்கொள்ள விதிமுறைகளைப் படிக்கவும்.

**ஓம் சாயி**

## ஸ்ரீ சாயிபாபா விரத விதிமுறைகள்

1. இந்த விரதத்தை ஆண், பெண், குழந்தைகள் யார் வேண்டுமானாலும் செய்யலாம்
2. இந்த விரதத்தை ஜாதி, மத பேதமின்றி எந்த சார்பினரும் செய்யலாம்.
3. இந்த விரதம் அற்புத பலன்கள் தர வல்லது. 9 வியாழக்கிழமைகள் விதிமுறைப்படி விரதம் இருந்தால் நிச்சயமாக விரும்பிய எண்ணங்கள் நிறைவேறும்.
4. விரதத்தை எந்த ஒரு வியாழக்கிழமையானாலும், சாயிநாமத்தை எண்ணி ஆரம்பிக்கலாம். எந்த காரியத்திற்காக ஆரம்பிக்கிறோமோ, அதை தூய மனதில் சாயிபாபாவை எண்ணிப் பிரார்த்தித்துக் கொள்ள வேண்டும்.
5. காலை அல்லது மாலையில் சாயிபாபாவின் போட்டோவிற்கு பூஜை செய்ய வேண்டும். ஒரு தூய ஆசனத்தில் அல்லது பலகையில் மஞ்சள் துணியைவிரித்து அதன் மேல் சாயிபாபா போட்டோவை வைத்து தூய நீரால், துணியால் துடைத்து, சந்தனம், குங்குமம் வைத்து திலகம் இட வேண்டும், மஞ்சள் நிற மலர்கள் அல்லது மாலை அணிவிக்கவும். ஊதுபத்தியும், தீபமும் ஏற்றி சாயிவிரத கதையைப் படிக்கவும். சாயிபாபாவை ஸ்மரணை செய்யவும். நைவேத்தியம் வைத்து (பழங்கள், இனிப்புகள், கற்கண்டு எதுவானாலும்) பிரசாதத்தை விநியோகிக்கவும்.
6. இந்த விரதத்தை பழ, திரவிய ஆகாரங்கள் (பால், டீ, காபி, பழங்கள், இனிப்புகள்) உட்கொண்டு செய்யவும். அப்படி நாள் முழுவதும் செய்ய முடியாதவர்கள் ஏதாவது ஒரு வேளை (மதியமோ, இரவோ) உணவு அருந்தலாம். நாள் முழுவதும் வெறும் வயிற்றோடு பட்டினியாக இந்த விரதம் செய்யவே கூடாது.
7. 9 வியாழக்கிழமைகளும் முடிந்தால் சாயிபாபா கோயிலுக்குச் சென்று தரிசனம் செய்யவும். முடியாதவர்கள் ( கோயில் அருகில் இல்லை என்றால்) வீட்டிலேயே சாயிபாபாவின் பூஜையை பக்தி, சிரத்தையுடன் செய்யவும்.
8. வெளியூர் செல்வதானாலும் இந்த விரதம் கடைப்பிடிக்கலாம்.
9. விரதத்தின் 9 வாரங்களில் பெண்களுக்கு மாத விலக்கு அல்லது இன்ன பிற காரணங்களாலே விரதம் செய்ய முடியவில்லை என்றால் அந்த வியாழக்கிழமையை கணக்கில் எடுத்து கொள்ளாமல் இன்னொரு வியாழக்கிழமை விரதம் இருந்து 9 வியாழக்கிழமைகள் நிறைவு செய்யவும்.





## விரத நிறைவு (உத்யாபனம்) விதிமுறைகள்

1. 9 வது வியாழக்கிழமை விரதத்தை நிறைவு செய்ய வேண்டும். அன்று 5 ஏழைகளுக்கு உணவு அளிக்க வேண்டும.( உணவு தங்களால் இயன்றது) நேராக உணவு அளிக்க முடியாதவர்கள் யார் மூலமாகவும் பணமோ, உணவுப் பொருளோ கொடுத்து உணவு அளிக்க ஏற்பாடு செய்யவும்.
2. சாயிபாபாவின் மஹிமை மற்றும் விரதத்தை பரப்புவதற்காக நம்முடைய வீட்டிற்கு அருகில் வசிப்பவர், சொந்த பந்தம், தெரிந்தவர் என்று இந்த விரத புத்தகங்களை 5, 11(அ) 21 என்று தங்களால் இயன்ற அளவு விநியோகம் செய்யவும்.
3. 9வது வியாழக்கிழமை விநியோகிக்கும் புத்தகங்களை அன்று பூஜையில் வைத்து பிறகு விநியோகிக்கவும். இதனால் புத்தகத்தை பெறும் பக்தரின் விருப்பங்களும் ஈடேறும்.

மேற்கூறிய விதிமுறைகளின்படி, விரதமும், விரத நிறைவும் செய்தால் நிச்சயமாக எண்ணிய காரியம் நிறைவேறும். இது சாயிபக்தர்களின் அசைக்க முடியாத நம்பிக்கை.

## ஸ்ரீ சாயி விரத கதை

கோகிலா என்ற பெண்மணியும் அவர் கணவர் மஹேஷும் குஜராத்தில் ஒரு ஊரில் வசித்து வந்தனர். இருவரும் அன்யோன்யமாக இருந்தனர். ஆனால் மஹேஷ் அவர்களோ சுபாவத்தில் சண்டைக்காரராக இருந்தார். வரைமுறையற்ற பேச்சு, சிடுமூஞ்சித்தனம் நிறைந்தவராக இருந்தார். அக்கம்பக்கத்தினர் அவரது சுபாவத்தினால் தொல்லை அடைந்தனர். ஆனால் கோகிலா அம்மாளோ மிகுந்த ஒழுக்கநெறியுள்ள பெண்மணியாக இருந்தார். இறைவன் மேல் தீரா நம்பிக்கை கொண்டு அனைத்தையும் சகித்துக் கொண்டு இருந்தார். கொஞ்சம் கொஞ்சமாக அவர் கணவரின் வியாபாரம் நஷ்டமடைய ஆரம்பித்து நாளடைவில் ஒரேயடியாக வருமானமும் நின்று போய்விட்டது. மஹேஷ் வீட்டிலேயே இருக்கத் துவங்கினார். அதனால் இன்னும் அவர் சுபாவம் மோசமடைந்தது. முன்பைவிட அதிக சிடுமூஞ்சி ஆனார்.

ஒரு மதிய நேரம் ஒரு முதிய சாது அவர் வீட்டு கதவருகில் நின்றார். முகத்தில் அபூர்வமான ஒளியும், தேஜஸும் நிறைந்து இருந்தது. அவர்

கோகிலாவிடம் சாதம், பருப்பு அளிக்கும்படிக் கேட்டார். கோகிலாவும் சாதம், பருப்பு அளித்து இரு கை கூப்பி நமஸ்காரம் செய்தார். சாதுவும், "சாயி உங்களை சுகமாக வைப்பார்" என்றுஆசீர்வதித்தார்.

கோகிலா அம்மாளும், "ஐயனே ! சுகம், சாந்தி எங்கள் விதியிலேயே இல்லை போன்றிருக்கிறது," என்று வருத்தமாகக் கூறி தன் துன்பம் நிறைந்த கதையைக் கூறினார்.

சாதுவும் ஸ்ரீ சாயிபாபாவின் விரதத்தைப் பற்றிக் கூறினார். 9 வியாழக்கிழமைகள் பழ, திரவிய ஆகாரங்கள் அல்லது ஒருவேளை உணவு உட்கொண்டு, முடிந்தால் சாயிபாபாவின் கோயிலுக்குச் செல்லவும். வீட்டிலேயே சாயிபாபாவிற்கு 9 வாரங்கள் பூஜை செய்யவும். சாயி விரதம் 9 வாரங்கள் செய்து, விதிமுறைப்படி நிறைவு செய்யவும். ஏழைகளுக்கு உணவு அளித்து, சாயி விரத புத்தகங்களை தன்னால் இயன்ற அளவு 5, 11, 21 என்ற எண்ணிக்கையில் விநியோகிக்கவும். இப்படி சாயி விரதத்தின் மஹிமையைப் பரப்பினால் சாயிபாபா உங்கள் அத்தனை ஆசைகளையும் நிறைவேற்றுவார். இந்த விரதம் கலியுகத்திற்கு ஏற்ற மிக உன்னதமான அற்புதங்கள் நிகழ்த்தும் விரதம். இந்த விரதம் கண்டிப்பாக அனைவருக்கும் மிகுந்த பலன்கள் அளிக்க வல்லது. ஆனால் விரதமிருப்போர் சாயபாபாவின் மேல் திடமான நம்பிக்கையும், பக்தியும் வைத்தல் மிக அவசியம். பொறுமையும் மிக அவசியம். யார் மேற்கூறியபடி விரதமும், நிறைவும் செய்கிறார்களோ, சாயிபாபா அவர்களுடைய விருப்பங்களை நிச்சயம் நிறைவேற்றுவார் என்று ஆசீர்வதித்துவிட்டுச் சென்றார்.

கோகிலா அம்மாளும் 9 வியாழக்கிழமைகள் விரதம் இருந்து 9வது வியாழனன்று ஏழைகளுக்கு உணவு அளித்தார், சாயி விரத புத்தகங்களை விநியோகித்தார். அவர்கள் வீட்டில் சண்டை, சச்சரவு பெயரளவுக்குக்கூட இல்லாமல் போய்விட்டது. வீட்டில் பெரும் சுகம், அமைதி, ஆனந்தம் நிலவியது. அதே சமயம் மஹேஷின் சுபாவமும் மாறி, அவருடைய வியாபாரமும் சூடு பிடித்தது. சிறிது நாட்களிலேயே ஆனந்தமும், செல்வமும் பெருகியது. கணவன், மனைவி இருவரும் ஆனந்தமாய் வாழலாயினர்.

ஒரு நாள் கோகிலா அம்மாளின் மைத்துனரும், மைத்துனர் மனைவியும் சூரத்திலிருந்து வந்தனர். பேச்சோடு பேச்சாக, தங்கள் குழந்தைகளால் படிப்பில் கவனம் செலுத்த முடியவில்லை என்றும்





பரீட்சையில் பெயில் ஆகிவிட்டனர் என்றும் வருத்தப்பட்டனர். கோகிலா 9 வியாழக்கிழமைகள் விரதத்தின் மஹிமையைக் கூறினார். சாயி பக்தியினால், குழந்தைகள் நன்கு படிக்கத் துவங்குவர். ஆனால் சாயிபாபாவின் மேல் அதீத விசுவாசமும், நம்பிக்கையும் வைத்தல் அவசியம். சாயி அனைவருக்கும் அருள்புரிவார் என்று கூறினார்.

அவர் மனைவி விரத விதிமுறைகளைக் கேட்டார். கோகிலா கூறலானார். "9 வியாழக்கிழமைகள் பழ, திரவிய ஆகாரங்களை உட்கொண்டு, முடியாதவர்கள் ஒருவேளை உணவு அருந்தி இந்த விரதம் செய்ய வேண்டும். 9 வியாழக்கிழமைகளும் சாயிபாபா கோயிலுக்குச் சென்று தரிசனம் செய்து வரவும்." மேலும்

- இந்த விரதம் ஆண், பெண், குழந்தைகள் யார் வேண்டுமானாலும் செய்யலாம். வியாழக்கிழமை சாயிபாபா போட்டோவிற்கு பூஜை செய்யவும்.
- மஞ்சள் நிற மலர்கள் (அல்லது) மாலை அணிவித்து, தீபம், ஊதுபத்தி ஏற்றி, பிரசாதம் நிவேதனம் செய்து, விநியோகம் செய்து சாயிபாபாவை ஸ்மரணை செய்யவும்.
- சாயி விரத கதை, சாயி ஸ்மரணை, சாயி பாமாலை, சாயி பாவனி இவற்றை பக்தியுடன் படிக்கவும்.
- 9வது வியாழக்கிழமை 5 ஏழைகளுக்கு உணவு அளிக்கவும்.
- 9வது வியாழக்கிழமை இந்த சாயி விரத புத்தகங்களை இலவசமாக விநியோகிக்கவும். (5 அல்லது 11 அல்லது 21 என்ற எண்ணிக்கையில்)

சூரத்திலிருந்து அவர் மைத்துனர் மனைவியின் கடிதம் சிறிது நாட்களிலேயே வந்தது. அதில் அவர் குழந்தைகள் சாயி விரதம் இருப்பதாகவும் மிக நன்றாக படிக்கத் துவங்கிவிட்டனர் என்றும் எழுதி இருந்தார். மேலும் அவரும் இந்த விரதம் இருந்ததாகவும், விரத புத்தகங்களை ஆபீஸில் விநியோகம் செய்ததாகவும் எழுதி இருந்தார். அதைப் பற்றி அவர் எழுதுகையில் அவர் தோழி சாருவின் மகளுக்கு சாயி விரத பலனாக மிக நல்ல இடத்தில் வரன் அமைந்து நல்ல விதமாகத் திருமணம் நடந்தது. அவர் பக்கத்து வீட்டில் வசிப்பவரின் நகைப்பெட்டி தொலைந்து போய் இருந்தது. அவரும் சாயி விரதம் இருந்தார். 2 மாதங்களுக்குப் பிறகு நகைப்பெட்டி திரும்பக் கிடைத்து விட்டது. (யார் திருப்பிக்கொண்டு வைத்தார் என்று தெரியாது). இப்படிப் பல அற்புதங்கள் நடந்தன.

கோகிலா அம்மையாரும் சாயி விரத மஹிமையை நன்கு புரிந்து கொண்டார். ஓ ! சாயி ! இப்படி எல்லோர் மேலும் பொழியும் கருணை என் மேலும் பொழிவீராக !

## சாயி விரதத்தினால் ஏற்பட்ட பல அற்புத நலன்கள்

இந்த விரத புத்தகத்தை முதன்முதலில் குஜராத்தியில் எழுதிய நிஷா ஜானியின் சொந்த அனுபவம். அவர் எழுதுகிறார்.

## முட்டி வலி ஆச்சரியமாக மறைந்த கதை

எந்த வியாதியானாலும் சாயி நாமத்தை ஜபித்தால் வியாதியின் தீவிரமும், வலியும் குறைந்துவிடும். சிறிது நாட்களில் வியாதி பூரண குணமடைந்துவிடும்.

எனக்கு கால் முட்டிகளில் வலி ஏற்பட்டது. சிறிது நாட்கள் முன்பு எலும்பு முறிவு ஆகி இருந்தது. அதனால் எலும்புகளின் சில துணுக்குகள் தனியாகி முட்டியை அழுத்தி வலி ஏற்படுத்திக் கொண்டு இருந்தது. டாக்டர் ஆபரேஷன் செய்துகொள்ளச் சொன்னார். ஆனால் நான் செய்து கொள்ளவில்லை. சிறிது நாட்களில் சரியாகிவிட்டது. பிறகு திடீரென்று முட்டியில் மீண்டும் வலிக்க ஆரம்பித்தது. ஆறு நாட்கள் ஒரு அடிகூட எடுத்து வைக்க தைரியமில்லை. வலியோ தாங்க முடியாமல் இருந்தது. விடுமுறையைக் கழிக்க அனைவரும் ஷீர்டி செல்ல திட்டமிட்டனர். பிறகு இராஜஸ்தானும் சுற்றிப் பார்க்கத் திட்டமிட்டனர். என்னால் அவர்களோடு செல்வது நினைத்துக்கூடப் பார்க்க முடியவில்லை. கால்முட்டி வலியால் பெரும் ரகளையே செய்துவிட்டேன். காலும், முட்டியும் தனித்தனியாக பிரிந்துவிடும் போல் இருந்தது. அவ்வளவு தாளாத வலி.

எனக்கு சாயிபாபாவின் மேல் பக்தி இருந்தது. விரதமும் அவ்வப்போது இருந்திருக்கிறேன். ஆனால் விதிமுறையோடு கூடிய விரதமோ, பூஜை செய்து கதை படித்தோ செய்ததில்லை. என் உறவினர் ஒருவர் 9 வியாழக்கிழமை விரத மஹிமை பற்றிக் கூறினார். எனக்கு 9 வியாழக்கிழமைகள் விரதம் இருக்க வேண்டும் என்ற உந்துதல் ஏற்பட்டது. நான் தைரியத்தை வரவழைத்துக் கொண்டு ஸ்கூட்டரில் உட்கார்ந்து சாயிபாபாவின் கோயிலுக்குச் சென்றேன். கோயிலில் அவரிடம் பிரார்த்தித்தேன். நானும் ஷீர்டி செல்ல வேண்டும்.





இராஜஸ்தான் சுற்றிப் பார்க்க வேண்டும். இந்த வலியும், வேதனையும் தாள முடியவில்லை. நான் இந்த கோயிலின் வாசலைத் தாண்டுவதற்குள் என்னுடைய முட்டி வலி மறைந்தால் நான் 9 வியாழக்கிழமைகள் விரதம் முறைப்படி செய்து ஒழுங்காக விரத நிறைவும் செய்வேன் என்று சாயிபாபாவிடம் வேண்டினேன்.

என்ன ஒரு ஆச்சரியம் ? என் வாழ்நாளில் இப்படிப்பட்ட அநுபவமோ, அற்புதமோ ஏற்பட்டதில்லை. கோவிலின் வாசற்படிக்கு வந்தவுடன் என் வலி மாயமாக மறைந்துவிட்டது. நான் ஆனந்தக் கூத்தாடினேன். பிறகு நாங்கள் 15 நாட்கள் ஷீர்டி, இராஜஸ்தான் சென்று வந்தோம். நிறைய நடந்தேன். சாயி அருளால் மலையே ஏறினேன். முட்டி வலி பெயரளவுக்குக்கூட இல்லை.

## எஸ்.எஸ்.ஸி. பரீட்சையில் நல்ல சதவீதம் எடுத்து பாஸ்

ஹேதல் என்ற சிறுமி பள்ளியில் படித்துக்கொண்டு இருந்தாள். படிப்பில் சிறிதும் கவனம் செலுத்த முடியவில்லை. ஒன்பதாம் வகுப்பு வரை எப்படியோ பாஸ் செய்து விட்டாள். தனக்கு எதுவும் ஞாபகத்தில் இருப்பதில்லை என்று பெற்றோரிடம் சொன்னாள். பெற்றோர் கவலையுற்றனர். பத்தாம் வகுப்பில் எப்படி பாஸ் ஆவாள் என்று வருத்தப்பட்டனர். பத்தாம் வகுப்பில் காலாண்டு, அரையாண்டுத் தேர்வுகளில் அனைத்துப் பாடங்களிலும் பெயில் ஆகி விட்டாள். தெரிந்தவர் ஒருவர் சொல்லி 9 வியாழக்கிழமை விரதம் ஆரம்பித்தாள். ஹேதலின் ஞாபகசக்தி அதிகரித்தது. எந்த ஆசிரியர்கள் அவளைப் பற்றிப் புகார் கூறினார்களோ, அவர்களே அவளைப் புகழ ஆரம்பித்தனர். சாயிபாபாவின் அற்புத மஹிமையால் எஸ்.எஸ்.ஸி. பரீட்சையில் 75% பெற்றாள்.

## மாயமாய் போன கட்டி

ஜல்பா என்ற பெண்மணிக்கு காதில் வலி ஏற்பட்டு கேட்கும் சக்தி குறைந்து போன நிலை ஏற்பட்டது. ஒரு ஸ்பெஷலிஸ்ட் டாக்டரிடம் காண்பித்தார். டாக்டர் பரிசோதனை செய்துவிட்டு "காதில் பின்புறம் கட்டி இருக்கிறது" என்று கூறினார். பிறகு பல டெஸ்டுகளை எடுத்து விட்டு ஆபரேஷன் செய்வது அவசியம். பயாப்ஸி செய்ய வேண்டும்

என்று கூறி நோயின் பெயரும் கூறினார். எல்லோரும் பயந்து விட்டனர். டாக்டர் 15 நாட்கள் கழித்து ஆபரேஷனுக்குத் தேதி குறித்தார். அந்த சமயம் ஜல்பா 9 வியாழக்கிழமைகள் விரதம் ஆரம்பித்தார். 9 வியாழக்கிழமைகள் விரதம் பூர்த்தி செய்த பிறகே ஆபரேஷன் என்று பிடிவாதம் பிடித்தார். 9வது வியாழக்கிழமை ஏழைகளுக்கு உணவளித்து, சாயி விரத புத்தகங்களையும் விநியோகித்தார். ஆஸ்பத்திரி சென்று பல டெஸ்ட்டுகளையும் செய்து பார்த்தார். எல்லா டெஸ்ட் ரிப்போர்ட்டுகளும் நார்மல் என்று வந்தன. கட்டியும் காணாமல் போய் இருந்தது. டாக்டரும் எல்லாம் சரியாகி விட்டது. இப்போது எந்த சிகிச்சையும் தேவையில்லை என்று கூறிவிட்டார். சாயிபாபாவின் மேல் ஜல்பா பூண்டிருந்த பக்தியும், நம்பிக்கையும் பன்மடங்கு ஆனது.

## பெரிய கண்டத்திலிருந்து தப்பினார்

இரமேஷ் என்பவரின் மனைவிக்கு அவ்வப்போது மலச்சிக்கல் தொந்தரவு இருந்து வந்தது. அவர் அப்போது ஹரடே என்னும் மருந்தை வெந்நீரோடு சேர்த்து உட்கொள்வார். ஒரு நாள் ஹரடே சாப்பிட்டு அதனுடன் கண்ணாடி டம்ளரில் வைத்திருந்த வெந்நீரை அருந்தினார். கண்ணாடி டம்ளர் உடைந்து இருந்ததை பிறகு கவனித்தார். கண்ணாடித்துண்டு வயிற்றில் சென்றிருக்குமோ என்று ஒரு சந்தேகம் வந்தது. அந்த கண்ணாடித்துண்டை வீட்டில் தேடினார், கிடைக்கவில்லை. இரண்டு மணி நேரம் கழித்து மலம் கழித்த போது இரத்தமும் சேர்ந்து கொட்டியது. இரத்தம் நிற்கவே இல்லை. அவர் கிட்டத்தட்ட மயக்க நிலைக்கே வந்து விட்டார். ரமேஷ் இதைப் பார்த்து பயந்தே விட்டார். அப்பொழுது இரவு 1 மணி. ரமேஷ் சாயிபாபாவின் போட்டோ முன் நின்று மனமுருக வேண்டினார். மனைவிக்கு இரத்தம் கொட்டுவது நின்று உயிர் பிழைத்துக் கொண்டால் 9 வியாழக்கிழமை விரதம் விதிமுறையோடு செய்வதாக வேண்டிக் கொண்டார். சிறிது நேரத்திலேயே மலத்தோடு சேர்ந்து கண்ணாடித்துண்டும் வெளிவந்து இரத்தம் கொட்டுவது நின்றது. அக்கணமே டாக்டரிடம் அழைத்துச் சென்றார். டாக்டர் டெஸ்ட் செய்து விட்டு வயிற்றில் உள்காயம் ஏற்படவில்லை, இல்லையென்றால் உயிருக்கே ஆபத்து வந்திருக்கும் என்று கூறினார். ஒரு வாரத்திலேயே குணம் ஆனார். ரமேஷ் சாயி விரதம் இருந்து விரத மஹிமையை பெருக்குவதற்காக புத்தகங்களையும் விநியோகித்தார்,





## ரத்தான இடமாற்றம்

நீலா என்பவர் அலுவலகத்தில் வேலை பார்க்கும் பெண்மணி. அவருக்கு அஹமதாபாத்திலிருந்து தூரமாக கட்ச் ஜில்லாவில் இடமாற்றம் ஆனது. செய்தி கேட்டு தலையில் இடி விழுந்தது போல் ஆனார். தனியாக இவ்வளவு தூரம் பெண்ணை எப்படி அனுப்புவது என்ற கவலையிலேயே அவர் அம்மாவின் ஆரோக்கியம் மோசமானது. பல இடங்களில் சிபாரிசுக்காக அலைந்தும், அப்ளிகேஷன் போட்டும் ஒன்றும் பலனில்லை. வெந்த புண்ணில் வேலை பாய்ச்சினாற் போல் இன்னொரு ஆர்டரும் வந்தது. இன்னும் பத்து நாட்களுக்குள் கட்ச் ஜில்லாவில் ஆஜர் ஆகவில்லை என்றால் வேலை நீக்கம் செய்யப்படுவார் என்று இருந்தது. அன்று வியாழக்கிழமை, நீலாவின் சிநேகிதி நந்திதா காலையில் அவரைப் பார்க்க வந்திருந்தார். சாயிபாபாவின் மேல் நம்பிக்கை வைத்து 9 வியாழக்கிழமைகள் விரதம் இருக்குமாறு சொன்னார். அன்றே நீலா 9 வியாழக்கிழமைகள் விரதம் துவங்கினார். மூன்றாவது நாள் அவருக்கு ஒரு ஆர்டர் வந்தது. அவருடைய கட்ச் ஜில்லாவிற்கான இடமாற்றம் ரத்தாகி, அஹமதாபாத்திலேயே வேறொறு கிளைக்கு மாற்றல் கிடைத்திருந்தது. அவரின் சாயி பக்தி அதிகரித்தது. 9 வியாழக்கிழமைகள் விரதம் இருந்து பூர்த்தி செய்கையில் ஏழைகளுக்கு உணவளித்து, சாயி விரத மஹிமை பிரச்சாரத்திற்காக சாயி விரத புத்தகங்களை விநியோகித்து விரத நிறைவு செய்தார்.

## திருமணம் ஆனது

ஒருவர் நன்கு படித்து, வக்கீலின் அலுவலகத்தில் கிளார்க்காக இருந்தார், திருமண வயதைத் தாண்டியும் அவருக்கு நல்ல வரன் அமையவில்லை. அவர் சாயிபாபாவின் மேல் நம்பிக்கை பூண்டிருந்தார். அவ்வப்போது பாபா கோவிலுக்கும் போய் வந்தார். அவருடைய நண்பர் தீவிர சாயி பக்தர். அவர் சாயி விரதம், விரத நிறைவு விதிகளையும் சொன்னார். விதிகள் அறிந்த நம் நண்பரும் 9 வியாழக்கிழமைகள் சாயி விரதம் பூண்டு, 9வது வியாழக்கிழமை, ஏழைகளுக்கு உணவளித்து, சாயி விரத புத்தகங்களை விநியோகித்து விரத மஹிமையை பெருக்கினார். அவருக்கு ஒரு நல்ல அழகும், குணமும் நிரம்பிய வேலையில் இருக்கும் பெண் மனைவியாக அமைந்தார்.

## இன்ன பிற அற்புதங்கள்

★ ஒரு இளைஞர் எம்.காம். வரை படித்தும் வேலை கிடைக்காமல் திண்டாடினார். அவரும் அவர் தாயாரும் 9 வியாழக்கிழமைகள் விரதம் இருந்தனர். விரத நிறைவும் முறைப்படி செய்தனர். அவருக்கு ஒரு நல்ல வேலை கிடைத்தது.

★ ஒரு கலைஞரின் குடும்பம், அவருடைய கலையின் மூலம் பெற்ற வருமானம் கொண்டே ஜீவிதம் நடத்தியது. அவருக்கு நாடகம், டி.வி. போன்றவற்றில் சான்ஸ் கிடைக்கவில்லை. 9 வியாழக்கிழமைகள் விரதம் இருந்தார். திடீரென்று அவருக்கு நல்ல கிராக்கி ஏற்பட்டு, குஜராத்தி திரைப்படங்கள், டி.வி. நாடகங்களில் முக்கிய வேடமேற்று நடிக்க ஆரம்பித்தார். குடும்பத்திலும் நல்ல ஆனந்தமும், செல்வமும் பெருகியது.

★ ஒரு நண்பர் வியாபாரத்தில் நஷ்டமடைந்து, வருமானம் இல்லாத நிலைக்கு தள்ளப்பட்டார். 9 வியாழக்கிழமைகள் விரதம் இருந்தார். விரத மஹிமையால் வியாபாரம் நன்கு செழிக்கத் துவங்கியது.

★ அமெரிக்காவில் மகனுக்கு எம்.பி.பி.எஸ். அட்மிஷன் கிடைக்காமல் ஒரு பெண்மணி அவதிப்பட்டார். சாயி விரத புத்தகம் எப்படியோ அவர் கை சேர்ந்து அவரும் 9 வியாழக்கிழமைகள் விரதம் பூண்டார். ஆச்சரியப்படத்தக்க வகையில் 3வது வியாழனே அமெரிக்காவில் மெடிக்கல் அட்மிஷன் கிடைத்தது.

## (அதிசயம்) திருமணமாகி 18 வருடங்கள் கழித்து பெண் குழந்தை பிறந்தது

மஹேந்திரன், ரேகா தம்பதியினருக்கு மணமாகி பல வருடங்கள் கடந்தும் குழந்தைகள் இல்லை. ரேகாவின் மாமியார் வீட்டிலும் பலவாறாகப் பேசி மனதைப் புண்படுத்தினர். எத்தனை சிகிச்சைகள் செய்தும் பலனில்லை. எத்தனையோ பரிகாரங்கள் செய்தும் பலனில்லை. அவர் அரசாங்க உத்தியோகத்தில இருந்தார். அவர் அலுவலகத்தில் வேலை பார்க்கும் சுரேஷ் என்பவர் ஒரு நாள் அனைவருக்கும் இனிப்புகள் வழங்கினார். ரேகா சுரேஷிடம் காரணம் கேட்டதற்கு திருமணம் ஆகி 10 வருடங்கள் கழித்து குழந்தை





பிறந்திருப்பதையும், மேலும் அவரும் அவர் மனைவியும் சாயி விரதம் இருந்ததையும், சாயிபாபாவின் மஹிமையையும் கூறி ரேகாவையும் 9 வியாழக்கிழமைகள் விரதம் இருக்குமாறு சொன்னார். அடுத்த நாளே சாயி விரத புத்தகத்தையும் ரேகாவிற்கு அளித்தார். ரேகாவும் பக்தி பூர்வமாக 9 வியாழக்கிழமைகள் விரதம் இருந்து முறைப்படி விரத நிறைவும் செய்தார். சாயிபாபா அவர் மேல் கருணை கொண்டார். திருமணம் ஆகி 18 ஆண்டுகள் கழித்து சாயி விரத மஹிமையால் அவருக்கு ஒரு பெண் குழந்தை பிறந்தது.

## சாயி ஸ்மரணை

வாரும் சாயி, வாரும் சாயி!
வாரும் சாயி, வாரும் சாயி!
பக்தர் உம்மை அழைக்கின்றோம்!
விருப்பம் ஈடேற வேண்டும்!
பக்தி பலமுற வேண்டும்!
வாரும் சாயி, வாரும் சாயி!
வாரும் சாயி, வாரும் சாயி!

துக்கம் போக்க வாரும் சாயி!
ஆனந்தம் அளிக்க வாரும் சாயி!
சேய் உமை அழைத்தேன் சாயி!
தாய் மனதோடு இளகுவாய் சாயி!
வாரும் சாயி, வ்ாரும் சாயி!

கீர்த்தனம் சாயி, பூஜை சாயி!
வாழ்வும் சாயி, வளமும் சாயி!
ஆனந்தம் சாயி, செல்வம் சாயி!
அற்புதம் சாயி, அபயம் சாயி!
வாரும் சாயி, வாரும் சாயி!

ஷீர்டி வாசி எங்கள் சாயி!
பக்தரின் இனிய அன்பர் சாயி!
கருணைக் கடலே எங்கள் சாயி!
அருள் பார்வை பாரும் சாயி!
வாரும் சாயி, வாரும் சாயி!

கிழக்கும் சாயி மேற்கும் சாயி!
வடக்கும் சாயி தெற்கும் சாயி!
எத்திசையில் நீ இருந்தாலும் சாயி!
வாரும் சாயி, வாரும் சாயி!

ஹிந்து சாயி முஸ்லிம் சாயி!
ஜீவன் சாயி யாத்திரை சாயி!
யேசு சாயி குருநானக் சாயி!
வாரும் சாயி, வாரும் சாயி!

தர்மம் சாயி! கர்மம் சாயி!
தியானம் சாயி! தானம் சாயி!
தூணிலும் சாயி துரும்பிலும் சாயி!
வாரும் சாயி, வாரும் சாயி!

திருப்தி சாயி முக்தி சாயி!
பூமி சாயி ஆகாயம் சாயி!
சாந்தி சாயி ஓம் சாயி!
வாரும் சாயி, வாரும் சாயி!
வாரும் சாயி, வாரும் சாயி!

சத்யம் சாயி, சிவம் சாயி!
சுந்தரம் சாயி ஈச்வரன் சாயி!
இரக்கம் சாயி எளியவர் சாயி!
அன்பு சாயி அமைதி சாயி!
வாரும் சாயி, வாரும் சாயி!
வாரும் சாயி, வாரும் சாயி!



சக்தி சாயி பக்தி சாயி!
சிவன் சாயி விஷ்ணு சாயி!
ப்ரஹ்மா சாயி பஞ்சபூதம் சாயி!
வாரும் சாயி, வாரும் சாயி!
வாரும் சாயி, வாரும் சாயி!

## ஸ்ரீ சாயி பாவனி

ஜய ஈஷ்வர் ஜய சாயிதயாளர்! 1
நீயே ஜகத்தின்பாதுகாப்பாளர்!!
தத்த திகம்பர ப்ரபூ அவதாரம்! 2
இவ்வுலகமே உந்தன் கைவசம்!!
ப்ரஹ்மாச்யுத சங்கர அவதாரம்! 3
சரணடைந்தோரின் பிராணாதாரம்!!
தரிசனம் தாரீர் ஓ! என் பிரபுவே! 4
போதும் இந்த பிறவிப்பிணியுமே!!
வேப்ப மரத்தினடியில் தோன்றினாய்! 5
கிழிந்த கப்னியே பொன்னாடையாய்!!
பிஷைபை தோளின் அணிகலனாய்! 6
பக்கிர் ரூபத்தில் வலம் வந்தாய்!!
கலியுகத்தில் நீ அவதரித்தாய்! 7
ஏழை எளியோரை உய்வித்தாய்!!
ஷீர்டியில் வாசம் செய்தாய்! 8
ஜனங்களின் மனதை கொள்ளை கொண்டாய்!!
குழலூதும் கண்ணனும் நீயானாய்! 9
வில்லேந்திய ராமனும் நீயானாய்!!
தயை நிரம்பியதே உந்தன் விழிகள்! 10
அமுது சொறிந்ததே உந்தன் மொழிகள்!!





புண்ய தலமானதே துவாரகமாயி! 11
அங்கு வசித்தாரே எங்கள் சாயி!!
பாபாவின் துனி அங்கு எரியும்! 12
நம் பாபங்கள் அங்கு தூசாகும்!!
வழிதவறிய அடியேன் பெருமூடன்! 13
நீயே எம்மை வழிநடத்தும் ஆசான்!!
பல்லாயிரம் பக்தர் உனைப் பணிந்தனரே! 14
கருணாமூர்த்தி எனை நீ மறவாதே!!
மூலே சாஸ்திரி என்ற அந்தணஸ்வாமி! 15
உன்னில் கண்டார் குரு கோலப்ஸ்வாமி!!
விஷப்பாம்பு ஷமாவை தீண்டியுமே! 16
விஷமிறக்கி அருளினாய் ஜீவனுமே!!
பிரளய மழையை சொல்லால் தடுத்தாய்! 17
பக்தர்களை முக்தர்கள் செய்தாய்!!
கோதுமையை அரைத்தாய் அரவையிலே! 18
அரவையில் காலராவும் அரைந்ததே!!
உன் திருவடியில் வைத்தேன் என் சிரம்! 19
மனமிரங்கி அருளும் எனக்கு வரம்!!
மனதின் விருப்பம் நிறைவேற்றுவாய்! 20
பிறவிக்கடலின் துன்பம் நீக்குவாய்!!
பக்த பீமாஜியும் நோயால் தவித்தான்! 21
பலவிதமாய் சிகிச்சைகள் எடுத்தான்!!
உந்தன் பவித்ர உதி உண்டான்! 22
ஷய ரோகம் போய் சுகமாய் ஆனான்!!
காகாஜி கண்டார் உன் திவ்யரூபம்! 23
அவருக்கு அளித்தாய் நீ விட்டல் ரூபம்!!
தாமுவிற்கு அளித்தாய் சந்தானம்! 24
அவர் மனம் பெற்றதே சந்தோஷம்!!
கிருபாநிதி, எனக்கு கிருபை செய்! 25
தீனதயாளா! என் மேல் தயை வை!!
உடல், பொருள், மனம் யாவும் உமக்கே! 26
அளித்திடுவாய் நற்கதி எமக்கே!!
மேகாவும் உன்னை அறியாமலே! 27
முஸ்லீம் பேதம் கொண்டானே!!
உன்னில் காட்டினாய் சிவனையுமே! 28
மேகாவும் அடைந்தான் பரமபதமே!!

எண்ணைக்குப் பதிலாய் நீருற்றியுமே!
ஒளி கொடுத்தாய் நீ ஜோதிக்குமே!! 29
அதனைக் கண்டவர் மெய் மறந்தனரே!
கேட்டவர் வியப்பு மாளவில்லையே!! 30
சாந்த் படீல் ஆழ்ந்தார் கவலையிலே!
குதிரையை இருமாதம் காணவில்லையே!! 31
சாயி, நீ அவனுக்கு இரங்கினாய்!
தொலைந்த குதிரையை மீட்டுத் தந்தாய் !! 32
நம்பிக்கை, பொறுமை மனதில் வை!
சாயி, சாயி என்றே தினமும் ஜபம் செய்!! 33
ஒன்பது வியாழன் விரதம் செய்வாய்!
வெற்றி நிச்சயம் உமக்கே என்றாய்!! 34
தாத்யாவின் உயிர் ஊசலாடியதும்!
தந்தாயே நீ உன் ஆயுளையும்!! 35
தாய் பாயாஜா அன்பாய் தந்த ரொட்டி!
தாத்யா உயிரை காத்ததோ? சாயி!! 36
பசு, பட்சிகளிடம் இரக்கம் கொண்டாய்!
அன்பாலேயே எமக்கு அரசனானாய்!! 37
எல்லோர்பாலும் உன் அருள் நோக்கு!
பக்தனுக்களித்தாய் அமுத வாக்கு!! 38
திருவடி பணிந்த பக்தருக்கே!
நீயே தந்தாய் அடைக்கலமே!! 39
அமுதினும் இனிய உன் வசனங்கள்!
போக்கும் பக்தனின் மன விசனங்கள்!! 40
தூணில் துரும்பில் இருக்கின்றாயே!
உன் லீலைகள் அற்புத பாடங்களே!! 41
உன்னைப் பாட சொற்கள் தேடுகிறேன்!
அறிவிலி நான் மடமையில் தவிக்கிறேன்!! 42
தீனதயாளா, நீ கர்ணனினும் வள்ளல்!
உன்னைத் துதித்தால் தொலையும் இன்னல்!! 43
ஓ! சாயி! என்மேல் தயை கொள்வாய்!
திருவடிகளில் எம்மை ஏற்றுக் கொள்வாய்!! 44
காலை, மாலை எவ்வேளையும் நிதமும்!
சாயி நாமம் நாவும் பாடிட வேண்டும்!! 45





திடபக்தியுடன் பாடும் பக்தனுமே!
பரமபதம் நிச்சயம் அடைவானே!! 46
தினமும் காலை, மாலை, இருவேளையும்!
சாயி புகழ் பாடும் இப்பா வரிகளையும்!! 47
பக்தியுடன் பாடுபவன் துணையாவார் சாயி!
அவரே நம்மைப் பெற்ற தாயி!! 48
சாயி லீலை உரைக்கும் இப்பதிகங்கள்!
செப்பியவை அனைத்தும் ரத்தினங்கள்!! 49
நம்பிக்கை, பொறுமையுடன் சாயியை துதிப்போம்!
தடைகள் நீங்கி வெற்றி அடைவோம்!! 50
சாயியே அகண்ட சக்தி ஸ்வரூபம்!
மனதை வசீகரிக்கும் அழகு ரூபம்!! 51
தூய மனமுடன் ஸ்மரணை செய் என் மனமே!
தினம் ஜபி சத்குரு சாயி நாமமே!! 52

அனந்த கோடி ப்ரஹ்மாண்ட நாயக ராஜாதிராஜ
யோகிராஜ பரப்ரஹ்ம ஸ்ரீ சச்சிதானந்த சத்குரு
சாயிநாத் மஹராஜ் கீ ஜய்
ஸ்ரீ சத்குரு சாயி நாதார்ப்பணமஸ்து சுபம் பவது

✱ துனி-பாபா தமது மசூதியில் வைத்த புனித நெருப்புக்குண்டம்

## ஸ்ரீ சாயிபாபாவின் உறுதி மொழிகள் (11 வாக்குகள்)

1. ஷீர்டியில் காலடி படும் பக்தனுக்கு வரும் ஆபத்து விலகிவிடும்.
2. என் சமாதியின் படி ஏறுபவனின் அனைத்து துக்கங்களும் போக்குவேன்.
3. இவ்வுலகை விட்டு என் பூதவுடல் மறைந்தாலும் பக்தன் அழைத்தால் ஓடி வருவேன்.
4. திட பக்தி, நம்பிக்கை விசுவாசத்துடன் யாசிப்பவன் ஆசையை என் சமாதி பூர்த்தி செய்யும்.
5. இன்னும் நான் உயிருடன் இருக்கிறேன் என்று எப்பொழுதும் உணரவும். இதனை சத்தியமென்றறிருந்து அனுபவம் பெறுவீர்.
6. என்னை சரணடைந்தும் வெறும் கையோடு திரும்பினான் என்று எந்த பக்தனாவது இருந்தால் அவனை எனக்குக் காண்பியுங்கள்.

7. பக்தர் என்னை எப்படிப்பட்ட பக்தியுடன் உணருகிறானோ, அப்படிப்பட்ட அனுபவங்கள் அவனுக்குத் தருவேன்.
8. எப்பொழுதும் உங்கள் சுமைகளை நான் சுமக்கிறேன். என் வாக்குப் பொய்யாவதில்லை.
9. நீங்கள் கேட்பது எல்லாம் நான் கொடுப்பேன். என் உதவியையும், அருளையும் அள்ளித்தர நான் காத்திருக்கிறேன்.
10. பக்தியுடன் என் மொழிகளை மனதில் ஏற்பவனுக்கு நான் கடன் பட்டவன் ஆவேன்.
11. என் திருவடிகளை அடைந்த பக்தன் பெரும் பாக்கியவான் ஆவான்.

## ஸ்ரீ சாயிபாபா பாமாலை

ஷீர்டியே உலகின் அழகிய புனிதத்தலம்!
ஸ்ரீ சாயிபாபா அவதரித்து அருளிய தலம்!!
கல்பதருவினும் பேறு பெற்ற வேப்ப மரம்!
அதன் மடியில் அமர்ந்தாரே இறைவனின் வரம்!!
பதினாறு வயதே நிரம்பிய பாலகனாம்!
பல சூரிய சந்திரர் சேர்ந்த ஒளிப்பிழம்பாம்!!
ஞானம், அழகு நிறைந்த ஆண்டவர் மகனாம்!
நீர் அமர்ந்ததும் கசப்பு வேம்பும் இனிப்பானதாம்!!
திருவே அமர்ந்தாள் உன் நெற்றியில் திலகமாய்!
தேஜஸ், ஸௌம்யம் நிறைந்த உருவமாய்!!
வெயில், மழை பாராமல் தவமும் செய்தாய்!
பாலகன் ரூபத்திலே உலகில் தோன்றினாய் !!
உன் தாய், தந்தை, குலம் யாரும் அறியாரே!
உலகம் என் வீடு, இறை என் தாய் என்றாயே!!
சிலர் மொழிந்தனர் நீ சிவனின் ரூபம்!
சிலர் அறிந்தனர் நீ விஷ்ணுவின் ரூபம்!!
தத்தாத்ரேய ரூபமோ ? ஸ்ரீ ராமனே நீதானா ?!
பீர் அவுலியாவோ ? பரப்ரஹ்மமே நீதானோ ?!!
எந்த ரூபமானாலும் நீயே எங்கள் தெய்வமானாய்!
பக்தனின் இஷ்ட ரூபத்திலே தரிசனமும் அளிப்பாய்!!
எத்தனை எத்தனை லீலைகள் புரிந்தாய்!
எண்ணற்ற ஏழைகளின் துன்பங்கள் துடைத்தாய்!!





தெவிட்டாத இன்பமன்றோ உந்தன் திருக்கதைதான்!
கேட்பவரும் திளைப்பரே காளில் தேனருவி தான்!!
மத, ஜாதி பேதங்களால் அழியும் மானிடம்!
உய்வுற உறவுப்பாலம் அமைத்த மஹாஅவதாரம்!!
சாந்த் படீலின் குதிரையை தேடித் தந்தாய்!
திருமண வீட்டாரோடு ஷீர்டியை அடைந்தாய்!!
ஆன்மீகத் தேடலில் அனைவரையும் அழைத்தாய்!
அருளோடு சேர்ந்து அற்புத அநுபவங்களும் தந்தாய்!!
மசூதித்தாயாம் துவாரகமாயி! அதில் வசித்து,!
பக்தர்களை ரட்சிக்கும் நீ அன்னையன்றோ? சாயி!!
திருக்கரமளித்த உதி அருமருந்தாகும் — உன்!
திருஅருட்பார்வை துயரினைப் போக்கும்!!
அருள் துனியில் எங்கள் பாபங்கள் தூசாகும்—உன்!
திருப்பாதங்கள் தொட்ட ஷீர்டி சொர்க்கமாகும் !!
அடைக்கலம் புகுந்தோரை அன்புடன் ரட்சித்தாயே—உன்!
அற்புத லீலைகள் அமுதே! அமுதினும் இனிய பேரமுதே !!
நீரூற்றி அகல்தீபங்கள் எரியச் செய்தாய்!
ஒளிஜோதியிலே அஞ்ஞான இருள் களைந்தாய் !!
பக்தனின் கண்கள் நீர் சொறிந்தாலே அக்கணமே,!
துயர் துடைக்க அவன் அருகில் நிற்பாயே !!
தாமு அண்ணா ஜாதகத்தில் ஒரு கோளாறு!
வருந்தி அழுதார் இல்லையே புத்திரப்பேறு !!
உன் திருவடி அடைந்தார்க்கு இல்லை ஜாதகமே!
அளித்தாய் மாங்கனிகள்! அடைந்தார் தாமு சந்தானமே !!
விதியையும் மீறுமே உன் அற்புத அருளுமே!
நம்பிக்கையுடன் பக்தன் உன்னை பணிந்திட்டாலே !!
சிவபக்தன் மேகாவையும் நீ சினந்தாயே, !
உன்னை முஸ்லிம் என்று பேதம் கொண்டதாலே !!
பக்தருக்குள்ளே இல்லையே ஏற்றத்தாழ்வே !
மேகாவுக்கும் நீ இரக்கம் காட்டினாயே !!
உள்ளேயே அவனை நீ உருமாற்றினாயே !
உன்னில் சிவம் கண்டு அவன் இறை அடைந்தானே !!
கங்கை, யமுனை நீர் உன் பாதத்தில் சொறிந்தாயே !!

தாஸ்கணுவின் பிரயாகை தாகம் தணித்தாயே ||
மசூதியில் அமர்ந்து நீ அளித்தாய் ஞானோபதேசம்|
பசியுற்றோருக்கு செய்வீர் அன்னதானம் ||
ஏழைகள் மேல் இரக்கம் கொள் என்றாயே |
உண்மையே சொல், நேர்மையாய் வாழ் என்றாயே ||
ஷீர்டியின் கல், புல் கூட பேறு பெற்றதே|
உன் திருவடி முத்தமிட்டு இறைவனை அடைந்ததே||
அப்புல்லும், கல்லுமாய் நானிருந்தாலே—உன்|
திருவடியை என் சிரஸேந்தி களித்திருப்பேனே||
எத்தனை தவம் செய்தேன் நான் அறியேனே|
இக்கணம் உனைத்தொழும் பேறு பெற்றேனே||
இறையருள் பெற்ற மனிதரால் மட்டுமே|
உன்னை பூஜிக்கும் பாக்கியம் கிட்டிடுமே||
உன் அருட்பார்வை என்மேல் பட்டாலே|
என் தீவினை போய் ஆனந்தம் நிறைந்திடுமே||
உன் மென்கரங்கள் என் சிரஸின் மேல் வைப்பாயே|
உத்தமன் நினைத் தொழுகின்றோம் செவிமடுப்பாயே||
உன் பாதாரவிந்தம் தொட்ட தூசு ஒன்று போதுமே,|
என் கண்களிலே ஒற்றிக் கொண்டாடிடுவேனே||
உன் பதகமலத் தீர்த்தம் என் நாவில் பட்டாலே|
நான் பெற்ற இன்பத்தை பாடிக் களித்திடுவேனே||
என் கனவினில் என்னை ஆட்கொள்வாயே|
நிஜந்தனிலே நிதமும் என் துணை நிற்பாயே||
அணுவிலும அணுவானாய், அகில அண்டமும் நீயானாய்|
எங்கெங்கு நோக்கிலும் நீயே நிற்கின்றாய்||
என் அன்னை நீ ! தந்தை நீ ! இவ்வுலகையே|
மூவடியாய் அளந்திட்ட திருமாலும் நீ||
அகிலம் உன் இல்லம், அண்ட சராசரம் உன் ரூபம்|
அடியார்க்கு அருள அல்லவா நீ எடுத்தாய் அவதாரம்||
குசேலனையும் குபேரனாக்கும் சக்தி இருந்துமே,|
உன் உணவை பிச்சை எடுத்து உண்டாய்||
சாயி நாமமே போக்கிடும் பல துக்கங்கள்|
சாயி நாமமே அளித்திடும் பரம சுகங்கள்||





சாயி நாமத்தினால் வியாழன் விரதம் பூண்டாலே|
சாயி நாமம் நல்கும் பல நன்மைகளுமே||
நோயுற்றோர் பிணி வேதனை நீங்கிடுமே|
துயருற்றோர் துன்பங்கள் தொலைந்திடுமே||
சாயி கிருபையால் தரித்திரம் மறைந்திடுமே|
சாயி விரதத்தால் சுகம், சாந்தி வீட்டில் நிலவிடுமே|
சாயி நாமம் தினமும் ஜபித்தாலுமே,|
ஒன்பது வியாழன் சாயி விரதம் பூண்டாலுமே,|
சாயி வருவார், இரங்குவார் நம்மிடமே,|
துன்பம் களைவார், தருவார் ஆனந்தமே,||
சாயியே சாச்வதம்! சாயியே சத்தியம் ! |
இதை நம்புபவன் வாழ்விலில்லை பெருந்துன்பம்||
சாயியே பரமேஸ்வரன், சாயியே பரமாத்மன்||
சாயியே பராசக்திரூபன், சாயியே பரந்தாமன்||
நம்பிக்கை பக்தி, பொறுமையுடன் சரணடைவோம்|
சாயி அருளால் பரப்ரஹ்மானந்தம் அடைவோம்||

ஸ்ரீ சாயிநாதருக்கே அர்ப்பணம்.



உதி-பாபா வழங்கிய திருநீறு      கப்னி-நீண்ட மேலங்கி

## குரு ஓம்

1. ஓம் ஸ்ரீ சாயி கணேஷாய நம:
2. ஓம் சத்குரு சாயிநாதாய நம:
3. ஓம் ஸ்ரீ ஜகத்குரு சாயிநாதாய நம:
4. ஓம் பரமகுரு சாயிநாதாய நம:
5. ஓம் தேவ குரு சாயிநாதாய நம:
6. ஓம் சாயி சிவசக்த்யை நம:
7. ஓம் சாயிசர்வ சக்திமானாய நம:
8. ஓம் சாயி சர்வவ்யாபங்காய நம:
9. ஓம் சாயிசர்வ ஆத்மாய நம:
10. ஓம் சாயிஅலக நிரஞ்சனாய நம:
11. ஓம் சாயிசர்வ சாட்சியாய நம:
12. ஓம் சாயிஅந்தர்யாமியாய நம:
13. ஓம் சாயிபரிபூரஜாத நம:
14. ஓம் சாயிஆதிசக்திஸ்யை நம:
15. ஓம் சாயிஅனாதி சக்த்யை நம:
16. ஓம் சாயிராமாய நம:
17. ஓம் சாயித்ரிலோகிநாதாய நம:
18. ஓம் சாயித்ரைகால தர்ஷியாய நம:
19. ஓம் சாயிகோவிந்தாய நம:
20. ஓம் சாயிசச்சிதானந்த ஸ்வரூபாய நம:
21. ஓம் சாயிபக்த ரக்ஷகாய நம:
22. ஓம் சாயிபரமானந்த ஸ்வரூபாய நம:
23. ஓம் சாயிமஹா துர்காய நம:
24. ஓம் சாயிஆகர்ஷண சக்தியாய நம:
25. ஓம் சாயிஅஞ்ஞான விநாசகாய நம:
26. ஓம் சாயியோகீச்வராய நம:
27. ஓம் சாயிபுருஷோத்தம புருஷாய நம:
28. ஓம் சாயிசங்கராய நம:
29. ஓம் சாயிசுகஸ்வரூபாய நம:
30. ஓம் சாயிகல்யாண ஸ்வரூபாய நம:
31. ஓம் சாயிஜகஆதாராய நம:
32. ஓம் சாயிரகுநந்தனாய நம:





33. ஓம் சாயிதேவ ரக்ஷகாய நம:
34. ஓம் சாயிஅசுரஸம்ஹாரியாய நம:
35. ஓம் சாயிகர்மபலதாதாய நம:
36. ஓம் சாயிதத்தாத்ரேய நம:
37. ஓம் சாயிகர்த்தா புருஷாய நம:
38. ஓம் சாயிதீனபந்துவாய நம:
39. ஓம் சாயிபகத் பயஹாரியநம:
40. ஓம் சாயிதுக்க நிவாரணாய நம:
41. ஓம் சாயிஅகால புருஷாய நம:
42. ஓம் சாயிஆதிநாராயணாய நம:
43. ஓம் சாயிசீலாதாரியாய நம:
44. ஓம் சாயிஜனஹித் காரியாய நம:
45. ஓம் சாயிசிவசம்புவாய நம:
46. ஓம் சாயிஆபத்தி ஹரணாய நம:
47. ஓம் சாயிசரணாகத வத்ஸலாய நம:
48. ஓம் சாயிமாதவாய நம:
49. ஓம் சாயிராகன் ஹாராய நம:
50. ஓம் சாயிஜகத்காரணாய நம:
51. ஓம் சாயிசத்கதிதாதாய நம:
52. ஓம் சாயிமாகாளிகாயை நம:
53. ஓம் சாயிகருணாசிந்துவாய நம:
54. ஓம் சாயிசர்வேஷ்வராய நம:
55. ஓம் சாயிஜகதீச்வராய நம:
56. ஓம் சாயிஅகால சக்தியை நம:
57. ஓம் சாயிபதீத பாவனாய நம:
58. ஓம் சாயிவிஸ்வநாதாய நம:
59. ஓம் சாயிவேத ஸ்வரூபாய நம:
60. ஓம் சாயிசுக தாதாய நம:
61. ஓம் சாயிஹரி நாராயணாய நம:
62. ஓம் சாயிசத்ய ஸ்வரூபாய நம:
63. ஓம் சாயிசர்வ ஸாமர்ணாய நம:
64. ஓம் சாயிஜோதி ஸ்வரூபாய நம:
65. ஓம் சாயிமஹாலக்ஷ்ம்யை நம:
66. ஓம் சாயிஹரிகோவிந்தாய நம:

67. ஓம் சாயிசோஹம் தேவாய நம:
68. ஓம் சாயிஓம்காரஸ்வரூபாய நம:
69. ஓம் சாயிமஹாசரஸ்வத்யை நம:
70. ஓம் சாயிஹரிவிட்டலாய நம:
71. ஓம் சாயிவெங்கடேஷ்வராயநம:
72. ஓம் சாயிமாயா விநாசகாய நம:
73. ஓம் சாயிமோஹ விநாசகாய நம:
74. ஓம் சாயிவிபித்தி பஞ்சநாத நம:
75. ஓம் சாயிபக்தி தாதாய நம:
76. ஓம் சாயிமுக்தி தாதாய நம:
77. ஓம் சாயிஞான தாதாய நம:
78. ஓம் சாயிகோபிவல்லபாய நம:
79. ஓம் சாயிபவதாரகாய நம:
80. ஓம் சாயிசர்வப்ரியாய நம:
81. ஓம் சாயிஅபராத ஹர்தாத நம:
82. ஓம் சாயிபண்டரீநாராய நம:
83. ஓம் சாயிகிருபா சாகராயநம:
84. ஓம் சாயிமங்கலகாரி தேவாய நம:
85. ஓம் சாயிஅமங்கலஹாரி தேவாய நம:
86. ஓம் சாயிஅம்ருத சிந்துவாய நம:
87. ஓம் சாயிசாந்தி தாதாயநம:
88. ஓம் சாயிசந்திரமௌலீஸ்வராய நம:
89. ஓம் சாயிஜகத்ரூபாய நம:
90. ஓம் சாயிஆத்ம ஜோதியாய நம:
91. ஓம் சாயிலக்ஷ்மிநாராயணாய நம:
92. ஓம் சாயிஅபேதசக்தியாய நம:
93. ஓம் சாயிவிஷ்வஆத்மாய நம:
94. ஓம் சாயிபரமாத்மாய நம:
95. ஓம் சாயிபக்த வத்ஸலாய நம:
96. ஓம் சாயிஅக்னிரூபாய நம:
97. ஓம் சாயிகாயத்ரியை நம:
98. ஓம் சாயிமஹாஅம்பிகாயை நம:
99. ஓம் சாயிதர்மரக்ஷகாய நம:
100. ஓம் சாயிசித்திதாதாய நம:
101. ஓம் சாயிரித்திதாதாய நம:
102. ஓம் சாயிஊர்ப்ரகாய நம:
103. ஓம் சாயிசாதுரக்ஷகாய நம:





104. ஓம் சாயிசிந்தாநாசகாய நம:
105. ஓம் சாயிஆனந்தமூர்த்தாய நம:
106. ஓம் சாயிபாக்ய விதாதாய நம:
107. ஓம் சாயிஹரிஹராய நம:
108. ஓம் சாயிபரப்ரஹ்மாய நம:

## ஸ்ரீ தத்தாத்ரேய பாவனி

ஜய யோகீச்வர தத்த தயாளா,
ஜகத்தினை ஆக்கிய மூலாதாரா!!
அத்ரிஅநுசுயா கருவியாய் கொண்டாய்,
ஜக நன்மைக்காகவே அவதரித்தாய்!!
பிரம்மா, ஹரி, ஹரரின் அவதாரம்,
சரணாகதர்களின் பிரணாதாரம்!!
அந்தர்யாமி, சத்சித்ஆனந்தன்,
பிரசன்ன சத்குரு இருதோளுடையன்!!
அன்னபூரணி பை தோளில் வைத்தாய்,
சாந்தி கமண்டலம் கரமேந்தினாய்!!
நாலு, ஆறு, பல தோளுடையான்,
அளவிலா ஆற்றலுடைய புஜமுடையான்!!
நின்சரண் புகுந்தேன் அறியாமூடன்,
வாரும் திகம்பரா! போகுதே பிராணன்!!
அர்ஜுனனின் தவக்குரல் கேட்டு கிருதயுகத்திலே,
அக்கணமே பிரசன்னம் ஆனாயே!!
அளவிலா ஆனந்தம், சித்தி அளித்தாய்,
முடிவில் பரம பத முக்தியும் அளித்தாய்!!
இன்று எனக்கருள ஏன் இத்தனை தாமதம்?
உனையன்றி எனக்கில்லை புகலிடம் !!
விஷ்ணுசர்மா பக்திக்கிரங்கினாய்,
அவனளித்த சிரார்த்த உணவு அருந்தி ரட்சித்தாய்!!
ஜம்ப அசுரனால் தொல்லை தேவருக்கே,
தயை புரிந்தாய் நீ அமரருக்கே!!
மாயை பரப்பி திதிசுதனை இந்திரன் கரத்தால் வதம் செய்வித்தாய்!!
அளவிலா லீலைகள் புரிந்தாயே,

அவற்றை வர்ணிக்க இயலுமோ சிவரூபனே ll
நொடியில் ஆயுவின் புத்திர சோகம் போக்கினாய்,
மகனை உயிர்ப்பித்து பற்றற்றவனாக்கினாய் ll
சாத்யதேவ, யது, பிரஹ்லாத, பரசுராமருக்கே,
போதித்தாய் நீ ஞானோபதேசமே ll
அளவிலா அருள் ஆற்றல் உடையோனே!
என் குரல் கேட்க ஏன் மறுத்தாயே ll
உன் தரிசனம் காணாமல் நானுமே,
இறுதி காணேன், வாரீர் இக்கணமே ll
த்விஜஸ்திரீயின் அன்பை மெச்சினாயே,
பிறந்தாய் நீ அவளின் மகனாகவே ll
ஸ்மர்த்துகாமி, கலியுக கிருபாளனே,
படிப்பறியா வண்ணானை உய்வித்தாயே ll
வயிற்று வலியில் துடித்த அந்தணனைக் காத்தாயே,
வல்லபேசனை கயவ, காலனிடமிருந்து காத்தாயே ll
என்னைப்பற்றிய அக்கறை உனக்கிலையே,
என்னை நினைப்பாய் ஒருமுறையேனுமே ll
தழைக்கச் செய்தாயே உலர்ந்த பட்டமரம்,
என்னிடம் ஏன் இத்தனை உதாசீனம் ll
முதிய மலட்டுப்பெண்ணின் கனவினையே,
சேய் அளித்து பூர்த்தி செய்தாயே ll
அந்தணனின் வெண்குஷ்டம் நீக்கினாயே,
அவன் ஆசைகளை நிறைவு செய்தாயே ll
மலட்டெருமையை பால் சொறிய வைத்தாய்,
அந்தணனின் தரித்திரம் போக்கினாய் ll
அவரைக்காய் பிச்சையாய் ஏற்றாய்,
அந்தணனுக்கு தங்கக்குடம் அளித்தாய் ll
பதி இறந்த பத்தினியின் துயர் துடைத்தாய்,
தத்தன் உன்னருளால் உயிர்த்தெழுந்தான் ll
கொடூர முன்வினையைப் போக்கினாய்,
கங்காதரனின் மகனை உயிர்ப்பித்தாய் ll
மதோன்மத் புலையனிடம் தோற்றனரே,
பக்த திரிவிக்ரமரை ரட்சித்தாயே ll
பக்த தந்துக் தன்னிஷ்டப்படியே,





ஸ்ரீ சைலம் அடைந்தான் இமைப்பொழுதிலே ll
ஒரே நேரத்தில் எடுத்தாயெட்டு ரூபங்களே,
உருவமற்றும் பலரூபமுடையவனே ll
தரிசனம் பெற்று தன்யமானரே,
ஆனந்தம் அடைந்த உன் பக்தருமே ll
யவனராஜன் வேதனை நீக்கினாயே,
ஜாதிமத பேதம் உனக்கில்லையே ll
ராம, கிருஷ்ண அவதாரங்களிலே,
நீ செய்த லீலைகள் கணக்கில்லையே ll
கல், கணிகை, வேடன், பசு, பட்சியுமே,
உன்னருளால் முக்தி அடைந்தனரே ll
நாமம் நவிலும் வேஷதாரியும் உய்வானே,
உன் நாமம் நல்காத நன்மையில்லையே ll
தீவினை, பிணி, துன்பம் தொலையுமே,
சிவன் உன் நாமம் ஸ்மரித்தாலே ll
பில்லி, வசிய, தந்திரம் இம்சிக்காதே,
ஸ்மரணையே மோட்சம் தந்திடுமே ll
பூத, குளிய, ஜந்து, அசுரர், ஓடிடுமே,
தத்தர் குண மஹிமை கேட்டதுமே ll
தத்தர் புகழ் பாடும் தத்த பாவனியையே,
தூபமேற்றி தினம் பாடுபவனுமே ll
இரு லோகத்திலும் நன்மை பெறுவானே,
சோகம் என்பதை அறியானே ll
யோக சித்தி அவன் அடிமையாகுமே,
துக்க தரித்திரம் தொலைந்திடுமே ll
ஐம்பத்திரு வியாழக்கிழமை நியமமுடனே,
தத்த பாவனி அன்புடன் படித்தாலே ll
நிதமும் பக்தியுடன் படித்தாலுமே, நெருங்கான் அருகில் காலனுமே ll
அநேக ரூபமிருந்தும் இறை ஒன்றே,
தத்துவமறிந்தவனை மாயை அண்டாதே ll
ஆயிரம் பெயரிருந்தும் நீ ஒருவனே,
தத்த திகம்பரா நீதான் இறைவனே ll
வந்தனம் உனை செய்வேன் பலமுறை நானுமே,
வேதம் பிறந்தது உன் மூச்சினிலே ll

சேஷனும் வர்ணித்து களைப்பானே,
பல ஜன்மமெடுத்த பாமரன் எப்படி வர்ணிப்பேனே ||
நாமம் பாடிய அனுபவம் திருப்தி தந்திடுமே,
உனை அறியாமூடன் வீழ்ந்திடுவானே ||
தவசி தத்வமஸி அவன் இறைவனே,
பாடுமனமே ஜயஜயஸ்ரீ குருதேவனே ||

★

| | | |
|---|---|---|
| பாவனி | — | ஐம்பத்திரு பாட்டு (அ) வரிகள் |
| ஸ்மர்த்துகாமி | — | ஸ்மரித்தவுடனே ஓடி வருபவர் |
| திதிசுதன் | — | ராக்ஷஸன் |
| அர்ஜுனன் | — | ஸஹஸ்ரார்ஜுனன் |
| த்விஜ | — | இருமுறை பிறவி எடுத்த அந்தண வைசிய க்ஷத்திரிய குலத்தோர் |

## சாயிபாபாவிற்கு நிவேதனம்

ஓ! சாயிபாபா ஏற்றருள்வாயே—நான்
அன்புடன் அளித்திட்ட உணவினையே.
பாசமுடன் நல்ல இனிப்புகள் செய்தேனே.
பக்தியுடன் பல பண்டங்கள் சமைத்தேனே.
பால்கோவா, பாயஸம், பொங்கல் நீ கேட்டாலே,
தருவிப்பேன் உனக்கு உணவு அளிக்கையிலே
கங்கை, யமுனை, காவிரியின் நீர் தருவேனே.
அறுசுவை உணவு . அன்னமும் அளிப்பேனே.
கொழுந்து வெற்றிலை, பாக்கு, கிராம்புடனே,
ஏலமும் சேர்த்து தாம்பூலம் அளிப்பேனே.
வியாழக்கிழமை சாயி பூஜை செய்வேனே.
தினமும் சாயிநாதருக்குணவு அளிப்பேனே.
சாயியின் அருளால் ஆனந்தம் பெருகிடுமே.







## சாயிபாபாவின் ஆரத்தி

ஆரத்தி எடுப்போம் ஸ்ரீசாயி உமக்கே.
ஆரத்தி எடுப்போம் வியாழக்கிழமையுமே.
பரமானந்த சுகத்தினை அளிப்பாயே.
தயையுடன் எமக்கருள் செய்வாயே.
துக்க, சோக, சங்கடம் தீர்த்தருள்வாயே.
வாழ்வில் ஆனந்தம் பொங்க அருள்வாயே.
என் மனதில் உன்னை நினைத்ததுமே,
அக்கணமே வந்து அநுபவம் தந்தாயே.
உந்தன் திருஉதி நெற்றியில் இட்டதுமே,
அனைத்து தொல்லைகள் தொலைந்தனவே.
சாயி நாமமே தினமும் ஜபித்தோமே.
நொடியிலும் உம்மை யாம் பிரியோமே.
வியாழக்கிழமை உன்னை பூஜித்தோமே.
தேவா! உன் கிருபையால் நலம் அடைந்தோமே.
ராம. கிருஷ்ண. ஹனுமான் ரூபத்திலே
அழகு தரிசனம் எமக்களிப்பாயே
பல மத முறையில் பூஜித்துமே
பக்தர் குறை கேட்டருள் புரிவாயே.
சாயியின் நாமம் வெற்றி நல்கிடுமே.
தேவா! வெற்றியின் அர்த்தம் நீதானே
சாயிதாஸனின் ஆரத்தி பாடுபவனுமே
சர்வ சுகம், சாந்தி வளம் பெறுவானே. (ஆரத்தி)

## நாம ஸ்மரணை

ஹரே ராம் ஹரே ராம் — ராம் ராம் ஹரே ஹரே
ஹரே கிருஷ்ண ஹரே கிருஷ்ண — கிருஷ்ண கிருஷ்ண
ஹரே ஹரே

ஹரே சாயி ஹரே சாயி— சாயி சாயி ஹரே ஹரே
ஹரே பாபா ஹரே பாபா—பாபா பாபா ஹரே ஹரே
ஹரே தத்த ஹரே தத்த — தத்த தத்த ஹரே ஹரே.

## சாயி பிரார்த்தனை

குருவாய் உந்தனைத் தொழுதேன் சாயிநாதா.
உன்னருளை எனக்குத் தருவாய் சாயிநாதா.
என் வாழ்விற்கு வழிகாட்டுவாய் சாயிநாதா.
இன்ப துன்பம் நிறைந்த வாழ்வின் ஒளியாவாய் சாயிநாதா.
வியாழன் தோறும் விரதம் இருந்தேன் சாயிநாதா.
உலகப்பற்றை விட்டொழிக்க அருள்வாய் சாயிநாதா.
குருவாயூரப்பனை உன்னிடத்தில் கொண்டுள்ள சாயிநாதா.
கோமதி அம்மனின் அருமை மகனே சாயிநாதா.
உந்தன் சரித்திரம் படித்திட அருள்வாய் சாயிநாதா.
உந்தன் பாதகமலம் சரண் அடைந்தோம் சாயிநாதா.
எனக்கு விஜயம் அருள்வாய் சாயிநாதா.

## ஸ்ரீ சாயிநாதர் அஷ்டகம்

1. அம்பிகை பெற்ற ஐங்கரனை துதித்தெழுதும் அடியேனின் ஐயன் சாயிநாதனே! அத்ரி அநுசூயா என்ற மும்மூர்த்தி சேர் தத்த அவதாரமே! வாசுகியால் கடையப்பெற்று அமுது பொங்கிய தலம் ஷீர்டியில் எழுந்தருளிய பரப்ரஹ்மமே. கற்பகத்தருவே! கலியுகத்தின் கண்கண்ட தெய்வமே, ஸ்ரீ பாத வல்லபனே! நரஸிம்ஹ சரஸ்வதியே, அக்கல்கோட் ஸ்வாமி ஸமர்த்தனே! பக்தனின் இன்னல் போக்கும் அனாத ரட்சகனே, அல்லாவின் புதல்வனே, இடர் நீக்கி, துயர் துடைத்து நலம் நல்க விரைந்து வந்து அருள்வாய் புண்ய நகர் ஷீர்டி வாஸ சாயிநாதனே.
2. அனுதினமும் சாயிநாமமே பிரதானமென்று எனக்கு விதித்த கடமையும் மறந்து, உன்னையே நினைந்து, உன் பாதமே பணிந்து பலவித பூஜைகள் செய்தேன். உன் திருக்கதை படித்தேன். திருநாமம் ஜபித்தேன். உன் சொற்படி அன்னதானமிட்டேன். பிறர் மனதை நோகடித்து அறியேன் இத்தனை செய்தும் இக்கணம் இன்னல் வந்திட யாம் செய்த பிழைதாம் யாதென உரைத்திடுவாய். பக்தி வேடம் பூண்டு போலி நாடகம் புரியும் அற்பனென்று என்னைப் புரிந்திட்டாயா? குழம்பித் தவிக்கும் எனக்கு விரைந்து வந்து அருள்வாய் புண்யநகர் ஷீர்டி வாஸ சாயிநாதனே.





3. வசீகர அருளால் பக்தரை உன் பக்கம் காணச் செய்தாயே. கோடானு கோடி பக்தர் உன் பதம் பற்றியதால், அடியேனுக்கு இரங்கிட உமக்கு நேரமில்லையா? மனமில்லையா? நொடிப் பொழுதும் உன்னைப்பிரியேன், இமைப்பொழுதும் உன்னை விலகிடேன். என் பக்தியில் நீ கண்ட பிழையறியேன் சாயி! முன்வினையோ! தீவினையோ? நானறியேன். தீவினையைத் தீக்கிரையாக்க உன் தயவொன்று போதுமே. கருணா சாகரா! தாயிலும் மேலான தயை மனம் கொண்டவனே. சேய் அழுதால் தாங்குமோ உன் மனமே? உன் நாமமே பிதற்றும் எனக்கு விரைந்து வந்து அருள்வாய் புண்ய நகர் ஷீர்டி வாஸ சாயிநாதனே.
4. கொடும் விட நஞ்சு கொண்ட அரவம் தீண்டியும், ஷாமாவை காலனின் பிடியிலிருந்து காத்தாயே! சர்வேஸா! சேஷசாயி! என்னைக் காத்தருள ஏனிந்தத் தயக்கம்? கண்கள் நீர் சொரிந்து காய்ந்தும் போனதே. நாவும் சாயிநாமம் பாடியே உலர்ந்தும் போனதே. என் மேல் நீ கொண்ட கோபம் அறியேனே. உன் நினைவன்றி வேறு எதையும் நினைந்திடேனே. நீயே அடைக்கலமென்று தஞ்சமும் அடைந்தேனே. என் பக்திக்கிரங்கி இக்கணமே என் கண் முன்னே தோன்றி வேண்டிய வரமளித்திட விரைந்து வந்து அருள்வாய் புண்ய நகர் ஷீர்டி வாஸ சாயிநாதனே.
5. உன் மேல் கொண்ட பக்தி சத்தியமே. உன் தூய மனதில் நான் உன்மேல் கொண்ட பக்தி சத்தியமே. உன் திருக்கதை கேட்டு சாயி பக்தனாகி, சாயி பித்தனாயும் ஆனேனே. உன் பதமலரில் பக்தியோடு விழுந்து கிடந்தேனே. நீ என்னைப் பாராமல் போனால் அது நியாயமில்லையே.என் துயர் நீ போக்காவிடில் உலகம் நம்மைக் கேலி பேசுமே, சாயி உன்னிடம் இரங்கவில்லை, உன் பக்தி ஒரு நாடகமே என்று என்னைத் தூற்றுமே. சாயி பக்தனுக்கா துயரம்? உலகம் உன்னையும் பழிக்குமே. உலகம் உன்னைப் பழித்தால் என் மனம் தாங்காதே. பழிச் சொல்லிலிருந்து காப்பாற்றி பக்தனையருள விரைந்து வந்து அருள்வாய் புண்யநகர் ஷீர்டி வாஸ சாயிநாதனே.
6. இறைவனை அறியாமல் எதுமறியோ மூடனாய், அறிவிலியாய், திரிந்த என்னை உன் பாதம் காணச் செய்து பக்தனாக்கினாய். எம்மதமும் சம்மதம் என்ற சர்வதத்வ போதகனே. இக்கணம் எனக்கு வந்த துயர் நீ போக்காவிடில் நாஸ்திகம் ஆனந்த எக்காளமிடுமே. தெய்வம் பொய்யானதே என்று எள்ளி

நகையாடுமே. பக்தி நம்பிக்கையை ஏசிடுமே. நீ பொய்யில்லை, நீ சத்தியமென்று நான் அறிவேனே. உண்மையாய் உலகமுழுதில் வ்யாபிக்கின்றாய் என்று பெருமையுடன் பறைசாற்றும் எனக்கு விரைந்து வந்து அருள்வாய் புண்ய நகர் ஷீர்டி வாஸ சாயிநாதனே.

7. அக்னி ஹோத்ரியாய் துனியை எரிய விட்டு, அரும் உதியால் பக்தனின் பிணி, துயர் போக்கும் துவாரகமாயி வாழ் ஆனந்த சாயி! பஞ்சபூதமும் உந்தன் கையசைவிலே, விரல் சொடுக்கில் விதியையே மாற்றும் விஸ்வநாதனே, பிரம்ம ஸ்வரூபனே! உம்மையன்றி யாரையும் அறியாத என் வேதனையைப் போக்கிடுவாய். துன்பக்கடலில் தத்தளிக்கும் எமக்கு தோணியாய் வந்திடுவாய். என் விண்ணப்பங்களை விருப்பமாய்க் கேட்டு என் இன்னல் களைந்து இன்பம் தருவாய். ஈடில்லா செல்வமும், வெற்றியும், பிணியிலா வாழ்வும், இறையருளும், நற்கதியும் பெற்றிட விரைந்து வந்து அருள்வாய் புண்ய நகர் ஷீர்டி வாஸ சாயிநாதனே.

8. யாமிருக்க பயமேன்! நம்பிக்கை, பொறுமை மிக்க பக்தி கொள் என்றாய். எத்தனை காலம் பொறுமை காப்பேன். பொறுமைக்கொரு எல்லை உண்டே. நான் உயர் கடவுள் இல்லையே. ஜனன மரணம் எய்தும் அற்ப மானிடப் பிறவியே. காலம் கடந்து விட்டதே. என்னையும் தாண்டி பலர் முன் சென்று விட்டனரே. கவலையில் நெஞ்சம் கனக்கிறதே. தோல்வியில் துவண்டு. வேதனையில் மாண்டு தூண்டிலிட்ட புழுபோல் துடிதுடிக்கும் பக்தனுக்கிரங்கி வேண்டிய பதினாறு செல்வமிக்க வளமான வாழ்வும் , சீரும் சிறப்பும், ஆரோக்கியம் ஆயுளும், புகழ் தரும் வெற்றியும். தனதானம் அனைத்தும் இனிதே தந்திட விரைந்து வந்து அருள்வாய் புண்யநகர் ஷீர்டி வாஸ சாயிநாதனே.

ஸ்ரீ சாயிநாதருக்கு அர்ப்பணம்.

